**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

## திருவிருந்து ஞாயிறு ஆராதனை / *Holy Communion Sunday*

## 1st ஜூன் / *June 2025*

**ஆராதனைக்கு அழைப்பு** — **திரு. லூயிஸ் ஐசக் குமார்**
Call to Worship — Mr. Louis Isack Kumar

**மௌன தியானம்**
Silent Meditation

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திரு. லூயிஸ் ஐசக் குமார்**
Prayer — Mr. Louis Isack Kumar

**தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

### தெய்வாட்டுக் குட்டிக்கு

*1. தெய்வாட்டுக் குட்டிக்கு*
*பன் முடி சூட்டிடும்;*
*இன்னிசையாய்ப்*
*பேரோசையாய்*
*விண் கீதம் முழங்கும்;*
*உள்ளமே போற்றிடு,*
*உனக்காய் மாண்டோராம்;*
*சதாகாலமும் அவரே*
*ஒப்பற்ற வேந்தராம்.*

*2. அன்பார்ந்த கர்த்தர்க்கு*
*பன் முடி சூட்டிடும்;*
*கை கால் விலாவின் காயங்கள்*
*விண்ணிலும் விளங்கும் .*
*பார்ப்பரோ தூதரும்*
*ஏறிட்டக் காயங்கள்?*
*பணிவரே சாஷ்டாங்கமாய்*
*மூடுவர் தம் கண்கள்.*

*3. சமாதானக் கர்த்தர்!*
*பன் முடி சூட்டிடும்;*
*போர் ஓய்ந்து ஜெப ஸ்தோத்ரமே*
*பூமியை நிரப்பும்;*
*ஆள்வார் என்றென்றைக்கும்;*
*ஆளும் எவ்விடமும்*
*விண் லோக பாக்கிய சிறப்பு*
*விளங்கி வளரும் .*

*4 ஆண்டாண்டும் ஆள்வோர்க்கு*
*பன் முடி சூட்டிடும்;*
*சராசரங்கள் சிஷ்டித்தோர்*
*உன்னத தெய்வமும்;*
*பாவிக்காய் ஆருயீர்*
*ஈந்த மீட்பரே,*
*சதா நித்திய காலமாய்*
*உமக்குத் துதியே.*

**பொதுவான பாவ அறிக்கை** — **சபையார் இணைந்து**
Prayer of Confession — Congregation

*சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப் போல நாங்கள் உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய் குற்றஞ் செய்தோம். செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்து வந்தோம். எங்களுக்குச் சுகமே இல்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத் தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமை உண்டாகும்படி, நாங்கள் இனித் தேவபக்தியும் நீதியும் தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்து வர, இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும்.* ***ஆமென்.***

***அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணம் (பாடலாக) (திரையில்)*** — **சபையார் இணைந்து**
The Apostle's Creed — Congregation

*உலகும் வானும் செய்தாளும் ஒப்பில் சர்வ வல்லவராய்*
*இலகு மருளாம் தந்தையாம் எம்பிரான்றனை நம்புகிறேன்.*

*அவரொரு பேறாமைந்தனுமாய் ஆதிமுதலெங் கர்த்தனுமாய்*
*தவறிலேசுகிறிஸ்துவையும் சந்ததமே யான் நம்புகிறேன்.*

*பரிசுத்தாவி அருளதனால் படிமேல் கன்னிமரியிடமாய்*
*உருவாய் நரர் அவதாரமாய் உதித்தாரெனவும் நம்புகிறேன்.*

*பொந்து பிலாத்ததிபதி நாளில் புகலரு பாடுகளையேற்றி*
*உந்துந் சிலுவையறையுண்டு உயிர்விட்டாரென நம்புகிறேன்.*

*இறந்தே அடங்கிப்பாதாளம் இறங்கி மூன்றாந் தினமதிலே*
*இறந்தோரிட நின்றே உயிரோ டெழுந் தாரெனவும் நம்புகிறேன்.*

*சந்ததமோட்சம் எழுந்தருளிச் சருவ வல்ல பரனான*
*எந்தை தன்வல பாரிசமேயிருக்கின்றாரென நம்புகிறேன்.*

*உயிருள்ளோரை மரித்தோரை உத்தமஞாயந் தீர்த்திடவே*
*ஜெயமாய்த் திரும்ப வருவாரெனச் சிந்தையார நம்புகிறேன்.*

*பரிசுத்தாவியை நம்புகிறேன் பரிசுத்தமாபொதுச் சபையும்*
*பரிசுத்தர்களின் ஐக்கியமும் பரிவாயுண்டென நம்புகிறேன்*

பாவ மன்னிப்புளதெனவும் மரித்தோருயிர்தெழு வாரெனவும்
ஓவா நித்ய ஜீவனுமே உளதெனவும் யான் நம்புகிறேன். **ஆமென்…..**

## இறையாசனத்தண்டை வருகை / *APPROACHING GOD'S THRONE*

**சிறுவர் / வாலிபருக்கான ஜெபம்**
Prayer for Children & Youth

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**மறைதிரு. விஜய் ஜோஸப்**
Rev. Vijay Joseph

**கர்த்தருடைய ஜெபம் (பாடலாக) (திரையில்)**
Lord's prayer (On screen)

**சபையார் இணைந்து**
Congregation

**பரமண்டலங்களில் வீற்றிருக்கும்**

பரமண்டலங்களில் வீற்றிருக்கும்
பரம பிதாவே எந்நாளும்
பரிசுத்தப்படுக உம் நாமம்
பரிவுடன் வருக உம் ராஜ்யம்.

பரலோகத்தில் உமது சித்தம்
பண்புடன் செய்ய படுவதுபோல்
தரணியில் உமது சித்தமுமே
தவறாது செய்ய படுக சதா.

அன்றன்றுள்ள எம் ஆகாரம்
அன்புடன் எங்களுக்கீந்தருளும்
நன்றயனார் கடன் யாவும்
மன்னியும்.

நன்னயம் போல் எம் பிழை
மன்னியும்.

தேவே சோதனை கெமை விலக்கி
தீமையினின்றெம்மை
இரட்சியுமே
மேவும் ராஜ்யம் வல்லமை
மகிமை
மிகவும் உமதென்றுமே
ஆமேன்…

## இறைவனுக்கு அளித்தல் / *GIVING TO GOD*

✝ **காணிக்கை பாடல்**
Offertory Song

**சபையார் இணைந்து**
Congregation

**எந்தன் அன்புள்ள ஆண்டவர்**

*1.* எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே நான்
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மைப்போல் ஒரு தேவனைப் பூமியில் அறிந்திடேன்
உயிர் தந்ததெய்வமே நீர்

**ஆ ஆனந்தம் ஆனந்தமே**
**அல்லும், பகலிலும் பாடிடுவேன்**
**இயேசுவே எந்தன் ஆருயிரே.**

*2.* பெற்ற தாயும் என் தந்தையும் ஆனவரே
மற்றும் எல்லாம் எனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடினும் நீரே
வாக்கு மாறாதவரே

*3.* உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே
உந்தன் நாமத்தை நம்பிடுவேன்
உம்மையல்லாதிப் பூமியில் யாரையும் நம்பிடேன்
உயிருள்ள தெய்வமே நீர்

*4.* பொன், வெள்ளியுமோ, பெரும்பேர் புகழோ
பண ஆஸ்தியும் வீண் அல்லவோ
பரலோகத்தின் செல்வமே என் அரும் ஏசுவே
போதும் எனக்கு நீரே

✝ **பூலோகத்தாரே யாவரும்**
Doxology

**சபையார் இணைந்து**
Congregation

## இறை வார்த்தைக்கு செவிமடுத்தல் / *LISTENING TO GOD'S WORD*

✝ **திருமறைப் பாடம்**
**கொலோசெயர் *1 : 15 - 23***
Scripture Reading
Colossians 1 : 15 – 23

**திரு. சாம் ஜோசப் சுரேஷ்**
Mr. Sam Joseph Suresh

**அருளுரை**
Sermon

**மறைதிரு. விஜய் ஜோஸப்**
Rev. Vijay Joseph

✝ **ஆயத்தப் பாடல்**
Preparatory Song

**சபையார் இணைந்து**
Congregation

**கர்த்தரின் பந்தியில் வா**

**கர்த்தரின் பந்தியில் வா, - சகோதரா**
**கர்த்தரின் பந்தியில் வா**

**கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின**
**காரணத்தை மனப் பூரணமாய் எண்ணி**

*1.* ஜீவ அப்பம் அல்லோ? – கிறிஸ்துவின் திருச் சரீரம் அல்லோ?
பாவ மனங் கல்லோ? – உனக்காய்ப் பகிரப்பட்ட தல்லோ?
தேவ குமாரனின் ஜிவ அப்பத்தை நீ தின்று அவருடன் என்றும்
பிழைத்திட

*2.* தேவ அன்பைப் பாரு – கிறிஸ்துவின் சீஷர் குறை திரு
பாவக் கோட்டைக் கூறு – ராப்போசன பந்திதனில் சேரு

*சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்*
*தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே*

*3. அன்பின் விருந்தாமே கர்த்தருடன் ஐக்யப் பந்தி யாமே*
*துன்பம் துயர் போமே :- இருதயம் சுத்த திடனாமே;*
*இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு*
*ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா*

***திருவிருந்து ஆராதனை முறைமை***
Order of Holy Communion

***அறிவிப்புகள்***
Announcements

† ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Memory Verses — Congregation

***I கொரிந்தியர் 9 : 22 - 23***
1 Corinthians 9 : 22 - 23

***22. பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.***

***23. சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தமே இப்படிச் செய்கிறேன்.***

† ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

† ***ஆசீர்வாதப் பாடல்*** — ***சபையார் இணைந்து***
Benediction Song — Congregation

† ***சபையார் நிற்கவும் / Indicates Congregation standing***